
# ஐக்கியதீபம்

யாழ்ப்பாணம்
**1969 புரட்டாதி**

வடபகுதி
ஐக்கிய
மேற்பார்வைச்
சபையின்
வெளியீடு

**மலர் 25**
**இதழ் 1**



Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்களும் பத்திரங்களும்

கீழே காட்டப்பட்டிருக்கும் பட்டியலிலுள்ள புத்தகங்களும், பத்திரங்களும் எங்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. தங்கள் தேவைகளை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்

| | | ரூபா-சதம் |
|---|---|---|
| 1. | கடன் மனுப்பத்திரம் ... ... | -03 |
| 2. | கடன் முறி ... ... | -03 |
| 3. | மத்தியஸ்தர் மனு ... ... | -03 |
| 4. | கேள்விப் பத்திரம் ... ... | -03 |
| 5. | அங்கத்தவர் பாஸ்புத்தகம (நாணய சங்கம்) | -25 |
| 6. | ப. நோ. கூ. ச. ,, ... ... | -50 |
| 7. | அங்கத்தவர் பேரேடு ... | 7-25 |
| 8. | பொதுப் பேரேடு (நாணய சங்கம்) ... | 3-50 |
| 9. | ,, ,, (பண்டசாலை) .... ... | 6-00 |
| 10. | கடன் இடாப்பு ... ... | 3-00 |
| 11. | அங்கத்தவர் இடாப்பு ... | 1-50 |
| 12. | காசுப்புத்தகம் (நாணய சங்கம்) ... | 5-00 |
| 13. | ,, (பண்டசாலை) .... ... | 7-00 |
| 14. | சிட்டைப்புத்தகம் பண்டசாலை 20/1 ... | 3-00 |
| 15. | ,, 18/1 ... | 7-00 |
| 16. | ,, 6/1 ... | 3-00 |
| 17. | மனேஜர் பிணைப்பத்திரம் ... ... | -20 |
| 18. | பொருள் பேரேடு (பண்டசாலை) ... | 6-00 |
| 19. | அங்கத்தவர் மனுப்பத்திரம் ... ... | -03 |
| 20. | பங்கு இடாப்பு ... ... | 3-50 |
| 21 | பங்குப் பணச் சிட்டை ... .. | 1-00 |
| 22. | விலைபொருள் இடாப்பு ... | 3-50 |
| 23. | உப-விதிகள் ப. நோ. கூ. சங்கம் ... | -40 |
| 24. | விவசாயச் கடன் மனுப்பத்திரம் ... | -05 |
| 25. | விவசாயக் கடன் முறி ... ... | -06 |
| 26. | விவசாயக் கடன் – இணைப்பு i ... | -03 |
| 27. | விவசாயக் கடன் – இணைப்பு (புத்தகம்) ii ... | 6-75 |
| 28. | விவசாயக் கடன் – இணைப்பு iii ... | 3-00 |
| 29. | விவசாயக் கடன் – இணைப்பு iv ... | 3-30 |
| 30. | நெசவுச் சங்க உபவிதி ... ... | -40 |
| 31. | ப. நோ. கூ. ச. காசுப் புத்தகம் புதியது ... | 6-00 |
| 32. | விற்பனைச் சிட்டை 8/1 ... ... | 3-50 |
| 33. | சமாசங்களின் கணக்குமுறை ... ... | 3-50 |
| 34. | ப. நோ. கூ. ச. சமாச உபவிதி ... ... | -45 |
| 35. | கடற்றொழிலாளர் கூ. வி. சங்க உபவிதிகள்... | -75 |

**வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1687

# இந்த இதழில்

ஆசிரியர் தலையங்கம் ...

இங்கிலாந்தில் பாவனையாளருக்குப் பாதுகாப்பளிக்கும்
நிறுவனங்கள் ... 5

கூட்டுறவு இயக்கம் இப்பொழுது அரசின் ஏவற்பெண் 6

**கட்டுரை**

உயர்தரப்பாடசாலைகளின் பாடத்திட்டத்தில்
கூட்டுறவு ஒரு பாடமாகப் போதிக்கப்பட வேண்டும் 10
—S. இராஜலட்சுமி

கிராமச்சந்தை ... 15
—அருணவதி ஆறுமுகம்

நேர்மை வாய்ந்த கூட்டுறவுப்பணியாளர் ... 18

கிராமச்சந்தை ... 20
—ஆ. யசோதரா

**கவிதை**

நாம் நயம் பெறுவோம் ... 24
—வே. ஐயாத்துரை

**காவியம் :**

தவம் ... 25
—காரை செ. சுந்தரம்பிள்ளை

**அட்டைப்படம் :**

யாழ் நகரிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களும், சமாசங்களும் கொண்டாடிய கூட்டுறவுத் தினவிழாவில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. J. M. சபாரத்தினம் கூட்டுறவுக் கொடியை ஏற்றி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையற்ற புகையின்பம் தருவது

# J.M.T. ரதி பீடி

காரம், மணம், குணம் யாவும் நிறைந்தது

## J. M. T. ரதி பீடி

சிறந்த புகையிலைக் கலவைகளைக் கொண்டு
கைதேர்ந்தவர்களின் மேற்பார்வையின்கீழ்
தயாரிக்கப்படுவது

## J.M.T. ரதி பீடி

மக்கள் விரும்புவது

## J.M.T. ரதி பீடி

இன்றே வாங்கிப் பாவித்துப் பயனடையுங்கள்
எங்கும் கிடைக்கும்

## J.M.T. ரதி பீடி

உற்பத்தியாளர்கள்:

**யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை**
**ஐக்கிய வியாபாரச் சங்கத்துடன்**

உங்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளுங்கள்
தொலைபேசி இல: **543**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

# ஐக்கியதீபம்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

ஆசிரியர்: து. சீனிவாசகம், B. A., J. P.

மலர் 25 | யாழ்ப்பாணம் 1969 புரட்டாதி | இதழ் 1

## கூட்டுறவுச் சங்கங்களும் விற்பனைப் பொருள்களும்

ரொச்டேல் முன்னோடிகள் அங்கத்தவர்கள் கொடுக்கும்பணத்திற்கேற்ற பொருள்களை வழங்கவேண்டுமென்ற கொள்கையைப் பின்பற்றினார்கள். அக்காலத்தில் அவர்களுடைய கூட்டுறவுச் சங்கம் சுத்தமான கலப்பற்ற உணவுப் பொருள்களையே வினியோகஞ் செய்தது. இப்போதைய கூட்டுறவுச்சங்கங்கள் உணவுப்பொருள்களுடன் புடவை, விவசாயத்திற்குத் தேவையான உரம் முதலிய பொருள்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்கள் ஆதியனவற்றை விற்பனை செய்கின்றன.

இப்பொருள்கள் குறைந்த விலையுள்ளனவாக இருப்பதுடன் தரமான பொருள்களாகவும் இருத்தல் வேண்டும். கருங்கச் சொல்லுமிடத்து பாவனையாளர்கள் தாம் கொடுக்கும் பணத்திற்குச் சமபெறுமதியான பொருள்களைப் பெறுதல் வேண்டும். இந்நோக்கம் கைகூடும் பொருட்டே கூட்டுறவுச் சங்கங்கள் தொண்டுபுரிதல் வேண்டும். நிருவாகசபையும், சங்க உத்தியோகத்தர்களும் கொள்வனவு உபசபையும் இவ்விடயத்தில் மிகவும் கவனஞ் செலுத்தினாலன்றி இதனை நடைமுறைக்குக் கொண்டுவர இயலாது. எத்தனை சங்கங்களில் அறித்த உத்தியோகத்தர்கள் நாம் எதிர்பார்க்கும் முறையில்தொண்டாற்றுகின்றனர்?

நுகர்ச்சியாளர்கள், தரமான பொருள்கள் இவைதான் என அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு அங்கத்தவர்களின் அறிவுவளர்ச்சி வேண்டற்பாலதாகும். இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளர்ச்சிக்குரிய நிறுவனங்கள் இல்லையென்றே எடுத்துரைத்தல் வேண்டும்.

பாவனைப் பொருள்கள் தரமானவை என்று எடுத்துரைப்பதற்கு அவை சில பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டு, சிபார்சு செய்யப்படுதல் வேண்டும். இத்தகைய சிபார்சை உற்பத்தியாளர், விற்பனையாளர், பாவனையாளர் ஆகியோர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். இங்கிலாந்தில் இத்தகைய தாபனங்கள் தொழிற்பட்டு அரியசேவை புரிந்து வருகின்றன. பிரிட்டிஷ் ஸ்ரான்டேட் இன்ஸ்ரிரியூற் கவுன்சில் ஒவ் இன்டஸ்ரியல் டிசைன், ரிறெயில் ரேடிங் ஸ்ரான்டேட்ஸ் அசோசியேசன் ஆகிய நிறுவனங்கள் தொழிற்படுகின்றன. பிரிட்டிஷ் ஸ்ரான்டேட் இன்ஸ்ரியூற்றால் பரிசோதிக்கப்பட்டு, அத்தாபனத்தால் கழுகு அடையாளம் பொறிக்கப்பட்ட பொருள்களைப் பாவனையாளர்கள் விரும்பி வாங்குகின்றனர். அரசாங்கத்திடமிருந்து மானியம் பெற்ற பொழுதும் அது மக்களுடைய தேசிய நிறுவனமாகும். வர்த்தக நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், தனியார் ஆகிய 11 000 அங்கத்தவர்களைக் கொண்ட அத்தாபனம் சந்தா மூலம் தேவையான பணத்தைப் பெறுகிறது. உற்பத்தியாளரினதும், பாவனையாளரினதும் ஆலோசனையுடன் பொருள்களின் தரங்களை நிர்ணயிக்கின்றது. கவுன்சில் ஒவ் இன்டஸ்ரியல் டிசைன் என்னும் தாபனம் தளபாடங்கள் மேசைச்சேலைகள் விளையாட்டுக்குத் தேவையான பொருள்கள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துவதற்குப் பணிபுரிகிறது. ரிரெயில் ரேடிங் ஸ்ரான்டேட்ஸ் சங்கம் என இன்னொரு நிறுவனம் உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், வர்த்தகர்கள் ஆகியோரது நிறுவனமாகும். சில்லறை வியாபாரத்தில் உயர்ந்த இலட்சியங்களைக் கைக்கொள்ளச் செய்வதில் இத்தாபனம் பெரும் வெற்றியீட்டி யிருக்கின்றது. இத்தாபனங்களுடன் இரு பாவனையாளர் தாபனங்களும் தொண்டாற்றுகின்றன. பாவனையாளர் ஆலோசனைச் சங்கமும், பாவனையாளர் சங்கமுமே அத்தாபனங்களாகும். இவை தம் வெளியீடுகள் மூலம் பாவனையாளருக்கு உதவியளிக்கின்றன.

எமது நாட்டிலும் இத்தகைய நிறுவனங்கள் பாவனையாளருக்குப் பெரும் தொண்டு புரியவேண்டுமென்பதே எமது பெரு விருப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தில் பாவனையாளருக்குப் பாதுகாப்பளிக்கும் நிறுவனங்கள்

இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கத்தால் ஆதரிக்கப் படும் பாவனையாளருக்குப் பாதுகாப்பளிக்கும் பிரபல மான நிறுவனங்கள் பாவனை யாளர் ஆலோசனைக்கவுன்சி லும் பாவனையாளர் சங்கமு மாகும். இவற்றுள் பாவ னையாளர் ஆலோசனைக் கவுன்சில் பல திறப்பட்ட சேவைகளைச் செய்துவரு கிறது. இது பிரித்தானிய ஸ்ரான்டேட்ஸ் இன்ஸ்ரி ரியூட்டின் நிறுவனமாகும். **கொள்வனவுகாரரின் வழி காட்டி** என்ற வெளியீட்டை மாதம் இருமுறை பிரசுரிக் கிறது. விரிவுரைகள் நிகழ்த் தியும், ஆலோசனைகள் கூறி யும், மாதர் சங்கங்களுடன் தொடர்புகொண்டும் சேவை புரிகின்றது. பிரித்தானிய ஸ்ரான்டேட்ஸ் இன்ஸ்ரி ரியூட்டின் அங்கமாகவிருந்து அரசாங்க மானியம் பெறு வதால் சுயாதீனமற்ற தாப னமாக இருந்தபொழுதும் உற்பத்தியாளருடன் தொ டர்பு கொண்டு சேவை செய்வது போற்றத்தகுந் தது. இங்கிலாந்தில் உற்பத்தி யாளரும், விநியோகஸ்தர் களும் பாவனையாளரின் தேவைகளைத் திருப்தி செய் வதற்காகத் தொண்டாற்று வதில் அக்கறை கொள்கின் றனர். இச்சங்கம் கழுகு முத்திரையிட்ட பொருள் களின் நன்மைகளை எடுத்துப் போதிக்கிறது. **கொள் வனவுகாரரின் வழிகாட்டி** என்னும் வெளியீடு கொள் வனவுப் பிரச்சினைகளைப்பற் றிக் கட்டுரைகள் வெளியிடு வதுடன் உற்பத்திப்பொருள் களைப்பற்றிநடாத்தப்பெற்ற பரிசோதனைகளைப் பற்றிய விபரங்களையும்பிரசுரிக்கிறது.

பாவனையாளர் சங்கம் 1957ம் ஆண்டு தொடக்கம் பணியாற்றி வருகிறது. பல திறப்பட்ட பொருள்களைப் பற்றியும், சேவைகளைப் பற்றி யும், ஆராய்ச்சிகளைப்பற்றி யும் தனது மாதாந்தப் பத்தி ரிகையாகய "எது" என்றபத் திரிகையில் பிரசுரிக்கிறது. முழுச்சுதந்திரமுடைய இப் பத்திரிகை பரிசோதனைகள் செய்வதிலும் அவற்றின் முடிபுகளைப் பிரசுரிப்பதிலும் ஈடுபடுகிறது. பாவனையாள ரிடத்தும் விநியோகஸ்தர் களிடத்தும் "எது" என்னும் பத்திரிகை நல்ல ஆதிக்கம் செலுத்திவருகிறது. சென்ற சிலமாதங்களாக சவர்காரம் சவர பிளேட்கள், கார் பாற் றறீஸ் ஆதிய பலதிறப்பட்ட பொருள்களின் பரிசோதனை விபரங்களை இப்பத்திரிகை பிரசுரித்திருக்கிறது.—து. சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு இயக்கம் இப்பொழுது அரசின் ஏவற்பெண்

### கூட்டுறவு விசாரணைக் குழுவின் அறிக்கை கூறுகின்றது

கடந்த 60 ஆண்டுகளிலே இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றினை ஆய்வோமாயின் ஓர் உண்மை நன்கு புலப்படும்: தொடக்கத்திலே அரசாங்கம் இயக்கத்தின் தர்மகர்த்தாவாகவும், பாதுகாப்பாளராகவும் இருந்து வந்தது. ஆனால் இப்பொழுது தன்விருப்பார்ந்த இயக்கமாய் வளரவேண்டிய இயக்கம் மீது அரசு மிகக் கெட்டியான கட்டுப்பாட்டினை விதிக்கின்றது. கூட்டுறவு இயக்கம் இப்பொழுது அரசின் ஏவற்பெண்ணாகை விளங்குகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் நடைமுறையிலே அரசாங்கக் கொள்கைகளைச் செயற்படுத்தும் கருவிகளாய் இருக்கின்றன.

மேற்கண்டவாறு கூட்டுறவு விசாரணைக்குழு தனது அறிக்கையிலே கூறுகின்றது.

இலங்கையிலே கூட்டுறவு வளர்ச்சிக்கு வழிகோலக் கூடிய பூரணத்துவம் வாய்ந்த நீண்ட காலத் தொடர்ச்சியான திட்டங்கள் எதுவும் இருந்ததாகச் சான்றுகள் இல்லை எனவும் அறிக்கை மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

விசாரணைக் குழுவினர் செய்துள்ள முக்கிய தகவுரைகளாவன:-

★ தேசீயக் கூட்டுறவு அபிவிருத்திச் சபை ஒன்று நிறுவப்படல் வேண்டும். இச் சபை கூட்டுறவு இயக்கத்தின் உத்தியோகப் பற்றற்ற தன்மையை வளர்ப்பதுடன் கூட்டுறவு வளர்ச்சியைப்பாதிக்க வல்ல அரசாங்கத் திணைக்களங்களுக்கிடையே இயைபை ஏற்படுத்தும். அத்துடன் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியினை மதிப்பிடுவதற்கும் அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதற்கும் ஏற்ற கருவியாய் இருக்கும். மேலும் அதனூடாகவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு உதவி வழங்கும். இச் சபை நாடாளுமன்ற விதியினால் நிறுவப்படும். அதன் நிருவாக அதிகாரங்கள் நெறியாளர் சபையிடம் ஒப்படைக்கப்படும். இச்சபை ஒரு சிறு நிருவாகக் குழுவினைத் தெரியலாம். நெறியாளர் சபையிலே 20க்கு மேற்படாதவர் அங்கம் வகிப்பர். இவர்களில் அரைவாசிப்பேர் உத்தியோகப் பற்றுள்ளோராயும், மற்றையோர் உத்தியோகப் பற்றற்றவராயும் இருப்பர். உணவு, விவசாய, அமைச்சரே இவ்வபிவிருத்திச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் தலைவராயிருப்பர். உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினர் பின்வருவோர்: விவசாயநிதி, திட்ட அமைச்சுக்களின் நிரந்தரக் காரியதரிசிகள், உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, விவசாய ஆணையாளர், கிராம அபிவிருத்தி ஆணையாளர், கடற்றொழில் ஆணையாளர். ஏனைய உறுப்பினர்கள் பின்வருவோர்: மக்கள் வங்கி, கூ. மொ. வி. தாபன தலைவர்கள், அகில இலங்கைக் கூட்டுறவுச் சமாசங்களின் தலைவர்கள், விவசாய, பொருளியல், கூட்டுறவுத் துறைகளிலே பிரசித்தம் பெற்ற அறிஞர்கள் முதலியோர். இவ்வபிவிருத்திச் சபைக்கும், கூட்டுறவுத் திணைக்களத்திற்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு இருக்கும். கூட்டுறவு ஆக்க ஆணையாளர் நெறியாளர் சபை உறுப்பினராய் இருப்பதுடன் சபையின் பிரதம நிருவாக உத்தியோகத்தராகவும் கடமையாற்றுவார்.

★ பயிற்சி நிலையங்களாகக் கடமையாற்றுவதற்கும், விஸ்தரிப்பு வேலைகளில் ஈடுபடுவதற்கும் நாடு முழுவதற்கும் வேண்டிய விசேட கல்விச் சேவைகளை வழங்கும்பொருட்டும்மூன்று கூட்டுறவுக் கல்லூரிகள் நிறுவப்பட வேண்டும். இவைகள் பொல்கொல, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட வேண்டும். இம்மூன்று கல்லூரிகளும் சம அந்தஸ்து உடையனவாய் இருக்கும். இக்கல்லூரிகளின் நிருவாகமும், முகாமையும் இலங்கைக் கூட்டுறவு ஒன்றியத்தின் வசமிருக்கும். யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரியாய்மாறும். இம் மூன்று கல்லூரிகளிலும் உத்தியோகத்தர்களுக்கும், உத்தியோகப் பற்றற்றவர்களுக்கும் ஒரே அடிப்படையில் பயிற்சியளிக்கப்படும். ஆனால் சில வகைப் பயிற்சி வகுப்புகள் முக்கியமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும், ஏனையவை பணியாளருக்கும் நடாத்தப்படும். பொல்கொல கல்லூரியில் போதனா மொழி சிங்களமாயிருக்கும். ஆனால், சில பயிற்சிகள் தமிழிலும்அளிக்கப்படும். யாழ்ப்பாணத்திலேபோதனாமொழி தமிழாக இருக்கும். தேவை ஏற்படின்சிங்களத்திலும் சில பயிற்சிகள்அளிக்கப்படலாம் காலியிலே போதனா மொழி சிங்களமாயிருக்கும். மூன்று கல்லூரிகளிலும் விடுதி வசதிகள் இருக்கும். இக்கல்லூரிகளைச் சிறப்புற வழி நடாத்துவதற்கு ஒரு தேசீய தர்ம கர்த்தா சபை நிறுவப்பட வேண்டும். பாடத்திட்டம், பயிற்சிகள், விரிவுரையாளர் நியமித்தல், வரவு செலவுத் திட்டத்தை வகுத்தல், பயிற்சிக் கொள்கைகளை வரையறுத்தல் போன்றவற்றைப் பற்றி இச்சபைக்கு திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் இருக்கும். இச்சபையிலே ஆறு தர்மகர்த்தாக்கள் அங்கம் வகிப்பர். அவர்களில் இருவர் கூட்டுறவு ஒன்றியத்தாலும், இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் அரசாங்கத்தாலும் நியமிக்கப்படுவர். மற்ற இருவரும்பல்கலைக்கழகங்களிலிருந்தோ அல்லது வேறு கல்விநிலையங்களிலிருந்தோ தெரிந்தெடுக்கப்பட்டு இச்சபையிலே சேர்க்கப்படுவர். கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி, பயிற்சி அதிகாரி தர்மகர்த்தா சபையின் செயலாளராய் கடமையாற்றுவார். பயிற்சிக்கு வேண்டிய நிதி ஒன்றியத்தின் பொதுநிதியிலிருந்து வேருக்கப்படல் வேண்டும். மூன்று கல்லூரிகளும் விஸ்தரிப்பு வேலைகளில் ஈடுபடும். அத்துடன், பொல்சொல யாழ்ப்பாண கல்லூரிகள் கூட்டுறவு பற்றி தபால் மூலம் பயிற்சியளிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

★ இப்பொழுதுள்ள கூ. மொ. வி. தாபனத்திற்குப் பதிலாக இருநிறுவனங்கள் நிறுவப்படல் வேண்டும். ஒன்று, கூட்டுறவு நுகர்வோர் சம்மேளனம் (இது இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சம்மேளனம் என வழங்கப்படும்) மற்றையது அரசாங்க இறக்குமதி நிறுவனமாய் கடமையாற்றும்: இது இலங்கை அரசாங்க இறக்குமதிக் கூட்டுத் தாபனம் எனப் பெயரிடப்படும். இவ்விரு நிறுவனங்களும் நாடாளுமன்ற விதியினால் அமைக்கப்பட வேண்டும். இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சம்மேளனம் கூட்டுறவுக் கல்விக்கும் பயிற்சிக்கும் நிதியுதவி அளிக்கும்.

★ கூட்டுறவு இயக்கத்தின் உச்ச வங்கியாகவும், நிதி நிலையமாகவும் கடமையாற்றும் பொருட்டுமக்கள்வங்கிமாற்றியமைக்கப்படல்வேண்டும். அதற்குஅதன் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள் அமைப்பு, நிருவாகம் போன்றவற்றில் சில மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். அரசாங்க வசமுள்ள பங்குகளைப் பெற்று (இப்பொழுது அரசாங்கத்திற்கு 50 வீத பங்குகள் உள.) மொத்த பங்குகளில் ⅔ பகுதியினை கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்பேற்கக்கூடியவகையிலேமக்கள்வங்கியின்விதியிலே மாற்றம் செய்யப்பட வேண்டும். அதே நேரத்தில் எட்டு நெறியாளர்களிலே நால்வரை பங்குள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யக்கூடிய வகையிலே ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும். மற்றும் நான்கு நெறியாளர்களிலே ஒருவர் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் (பதவி ரீதியாக) ஏனைய மூவர் நிதியமைச்சினால் நியமிக்கப்படுவர். ஐந்தாண்டுகளுக்குப் பின்பு கூட்டுறவு இயக்கம் உறுதிவாய்ந்ததாக விளங்கும் என எதிர்பார்ப்பதாயும், அப்பொழுது நெறியாளர் சபை ஒன்பது பேரைக் கொண்டதாய் இருக்க வேண்டும் என்றும், அவர்களில் அறுவர் கூட்டுறவுச் சங்கங்களினால் தெரிவு செய்யப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்றும் (அதாவது அக்கட்டத்திலே பங்குகளின் மொத்தத் தொகையிலே ⅔ பகுதி கூட்டுறவுச் சங்கங்களின் வசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால்) ஏனைய மூவரையும் நிதியமைச்சர் நியமிப்பார் என்றும் கூட்டுறவுவிசாரணைக் குழு கூறுகின்றது. தனது பணியாளர்களைப் பயிற்றுவிப்பதன் பொறுப்போடு கூட்டுறவு இயக்கத்தின் கல்வி, பயிற்சித் திட்டத்தின் பொறுப்பினையும் மக்கள் வங்கி ஏற்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களோடு வைத்துள்ள தொடர்புகளின் விளைவாக முந்திய ஆண்டிலே பெற்ற இலாபத்திலே 10 வீதத்தினை கூட்டுறவுக் கல்விக்குச் செலவழிப்பதற்காக இலங்கைக் கூட்டுறவு ஒன்றியத்திற்கு மக்கள் வங்கி கொடுத்துதவ வேண்டும். மக்கள் வங்கியிலே தாம் தகவுரை செய்த மாற்றங்கள் செய்யப்பட்டதும் கூட்டுறவு வங்கிகள் மக்கள் வங்கியுடன் இணையும் என தாம் எதிர்பார்ப்பதாயும், ஆனால் கூட்டுறவுவங்கிகள்திருப்திகரமாக இயங்குமேயாயின் கட்டாய இணைப்பினை தகவுரை செய்வதற்கு தாம் தயங்குவதாயும் விசாரணைக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

★ கூட்டுறவுத் திணைக்களம் 'தடையற்ற' ஒன்றாய் இருத்தல் வேண்டும். ஆனால், கூட்டுறவு ஆக்க ஆணையாளர் பதவிஉட்பட சிரேஷ்ட பதவிகளுக்கு கூட்டுறவு இயக்கத்திலே கணிசமான அளவு அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களே நியமிக்கப்பட வேண்டும்.

★ ஆரம்பச் சங்கங்கள் நேரடியாக உச்ச நிறுவனங்களுடன் இணைக்கப்பட வேண்டும். அவற்றிற்கு நடுவே ஓர் அடுக்கு இருத்தலாகாது. எல்லாமாக ஒன்பது உச்ச தேசிய நிறுவனங்கள் இருத்தல்வேண்டும் அவையாவன: இலங்கைக் கூட்டுறவு ஒன்றியம், மக்கள் வங்கி, ஏழு வியாபாரச் சம்மேளனங்கள் (இவற்றில் நான்கு விவசாயத்தில் பிரத்தியேகமாக ஈடுபடும்.) வடமாகாண விளைபொருள் உற்பத்தியாளர் சமாசம் உப உணவுப் பொருட்களின் விநியோகத்திற்கென தேசீய விற்பனைச் சம்மேளனமாய் கருதப்படலாம் என்றும்,அதன் தலைமை அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இருத்தல் வேண்டும் என்றும், வேண்டிய இடங்களிலே கிளைகள் நிறுவப்படலாம் என்றும் விசாரணைக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

★ கூட்டுறவுப் பணியாளரின் சம்பள விகிதங்களை அங்கீகரிப்பதற்கும் கூட்டுறவுத் துறைப் பணியாளர் பற்றி வேறு சில கடமைகளை ஆற்றுவதன் பொருட்டும், மூவரைக் கொண்ட தற்காலிக குழு உடனடியாக நியமிக்கப்பட வேண்டும். கூட்டுறவு இயக்கத்திலே வேலை முறைகளை ஒழுங்கிசைவுபடுத்துவதற்கும், உயர்த்துவதற்கும் ஒரு நிரந்தர கூட்டுறவுப் பணியாளர் சேவைச் சபை இருத்தல் வேண்டும்

[14ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட பிரிவில் 2-வது பரிசு பெற்ற கட்டுரை

# உயர்தரப் பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் கூட்டுறவு ஒரு பாடமாகப் போதிக்கப்பட வேண்டும்

S. இராஜலட்சுமி

கூட்டுறவைப் பற்றி அனேகர் பேசுகிறார்கள். ஆனால் அதைப்பற்றி ஓரளவுக்காவது புரிந்து கொண்டவர்கள் ஒரு சிலரே. இதன் காரணமாகவே ஒற்றுமையை வளர்க்கத் தோன்றிய கூட்டுறவு நாட்டிலே அங்குமிங்கும் போட்டியையும், பதவி வேட்டையையும் ஏறபடுத்தியுள்ளது. பொருளாதாரத் துறையிலே நல்வழி காட்டத் தொடங்கிய கூட்டுறவுச் சங்கங்களிலே ஊழலும், இலஞ்சமும் இல்லையென்று கூறமுடியுமா? இவ்வாறான பரிதாபநிலை கூட்டுறவுத்துறையிலே காணப்படுவதற்கு ஒரே காரணம், கூட்டுறவைப் பற்றிய தெளிவான அறிவு நாட்டு மக்களிடையே காணப்படாமையே. ஆகவே கூட்டுறவுக் கல்வியை உயர் வகுப்புக்களில் புகட்டுவதுதன் மூலந்தான், கூட்டுறவின் விலைமதிக்க முடியாத பயனை நாம் அனுபவிக்க முடியும்.

கூட்டுறவு இயக்கத்திலே இன, மத பேதங்களற்று சரிநிகர் சாமானமாக ஜனநாயகக் கோட்பாட்டின் கீழ் அனைவரும் அங்கத்தவராகி உழைத்து வருகின்றனர். ஆனால் இவர்களில் கல்வி கல்லாதவர்கள் பெரும்பாலானோர். எனவே, இவர்கள் கூட்டுறவில் நாட்டம் கொண்டவர்களானாலும் கூட்டுறவின் உண்மையான அடிப்படைக் கருத்துக்களைச் சரிவரப் புரிந்து கொண்டவர்களாக இவர்கள் இருக்க முடியாது. கூட்டுறவு இயக்கத்தில் ஆர்வமும், உழைப்பும் மிக்கவர்களாக இவர்கள் இருக்கலாம். ஆனால் அதைப்பற்றிய அறிவு இல்லாவிட்டால் முயற்சிக்கேற்ற பயனை அடைய முடியாததுடன் கூட்டுறவின் புனிதத் திருக்கோலத்தையும் தரிசிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றுபட்டால்
உண்டு வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கின்
அனைவர்க்கும் தாழ்வே"

என்பதையும் உணர முடியாது. புனிதமான இக்கூட்டுறவின் கருத்துக்களை அவர்கள் படித்துணர்ந்து கொண்டு அதற்குத்தக நின்று செயலாற்றுவதே கூட்டுறவு இயக்கத்தின் புனித இலட்சியம் அனைவரினதும் இதயங்களிலும் பலமாக வேரூன்றி வியாபித்து வளர்ந்து நற்பயன்களைக் கொடுக்க ஏதுவாயிருக்கும்.

மாணவர்களே நாட்டின் வருங்காலச் சிற்பிகள். உயர் வகுப்பு மாணவர்களின் கல்வி வளர்ச்சி புத்தகப் படிப்பில் மட்டுமன்றிச் சிந்தனைச் செறிவிலும் தங்கியிருக்கக் காண்கின்றோம். எனவே, அவர்களிடம் தாம் கண்ட அல்லது கேட்ட அல்லது தமது மனதிற்பட்ட எந்த ஒரு கருத்தையும் சிந்தனைச் சூழலிலே சிக்கவிட்டு அதன் உட்பொருளை அறிந்து கொள்ளும் ஆற்றலை காணக் கூடியதாகவிருக்கின்றது. மேலும் மாணவர்களிடத்தில் கூட்டுறவு நுண்கலையைப் பதியவைப்பது இலகுவானதன்று. எனவே தான் உயர்வகுப்பு மாணவர்களிடத்தில் கூட்டுறவைப் போதிப்பது முக்கியமாகின்றது.

விஞ்ஞானம், கலை, வர்த்தகம் போன்றவற்றிற்கு உயர்தர வகுப்புக்களில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அறிவியலும், கலை, கலாச்சாரங்களும் மாணவர்களின் சிந்தனையை எவ்வளவில் வளர்க்க உதவுகின்றனவோ, அதே அளவில் கூட்டுறவும் அவர்களது சிந்தனையை வளர்க்க உதவ வேண்டும். அறிவியலால் விஞ்ஞானத்தை வளரச் செய்வது அஞ்ஞானத்தைப் போக்குவிப்பது போலவும், கலை, கலாச்சாரங்களால் பண்பாட்டையும், நாகரீகத்தையும் வளர்ப்பது போலவும் கூட்டுறவால் சமூக நலனையும் மனித ஒற்றுமையையும் வளரச் செய்தல் வேண்டும்.

கூட்டுறவுக் கல்வியைப் போதிப்பதற்கு மாகாண ரீதியாக கூட்டுறவுப் போதனை பாடசாலைகள் காணப்படினும் சகல பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்கள் இப்பாடசாலைக்குச் சென்று கூட்டுறவுக் கல்வியைக் கற்க முன்வரமாட்டார்கள். எனவே, மாணவர்கள் கூட்டுறவின் அடிப்படைக் கருத்துக்களை தெளிவாக விளங்காது, கூட்டுறவில் ஆர்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாது இருப்பார்கள். கூட்டுறவிற்கென ஒரு பாடத்திட்டம் கல்வித் திணைக்களத்தால் வகுக்கப்பட்டு ஓர் அங்கீகரிக்கப்பட்ட பாடமாக மாணவர்கட்குப் போதிக்கப்பட வேண்டும். அவ்வாறு போதிக்கப்பட்டால் பாடசாலையை விட்டு விலகிய பின்னர் நாட்டின் விவசாயம், வியாபாரம், கடன் வழங்கல், சேமிப்பு, கைத்தொழில் போன்ற சகல துறைகளிலும் கூட்டுறவைப் புகுத்தி வாழ்க்கைப் பிரச்சினைகளைக் குறைக்க முடியும். மேலும் கிராமந்தோறும் கல்வியறிவில்லாத பாமரமக்களிடையேயும் கூட்டுறவைப் பற்றிய தெளிவான கருத்தைப் பரப்ப முடியும். மேலும், மதிநுட்பமும், கூட்டுறவுக் கல்வியில் திறமையுடைய மாணவர்களுக்கு கூட்டுறவுக் கல்வியில் மேலும் பயிற்சியளித்து அவர்களைக் கூட்டுறவு ஆசிரியர்களாக நியமித்துக் கூட்டுறவை வளர்க்க முடியும்.

முன்னேற்றமடைந்த ஐரோப்பிய நாடுகளான இத்தாலி, நெதர்லாந்து, ஜேர்மனி. போன்ற நாடுகளில் பொருளாதார விருத்தி கூட்டுறவின் மூலம் முன்னேறியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. விவசாயம், மீன்பிடி கைத்தொழில், கலை, விஞ்ஞானம், வர்த்தகம் போன்ற சகல துறைகளிலும் கூட்டுறவு முறை புகுத்தப்பட்டு இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அயல் நாடுகளில் கூட்டுறவு தனியார் தாபனங்களாக இருக்கின்ற போதிலும் அவ்வவ் அரசாங்கங்களின் பூரண ஒத்துழைப்பையும், பணவுதவியையும் பெற்றே முன்னேறி வருகின்றன. இதன் காரணமாக கூட்டுறவுக் கல்வியை ஒரு கட்டாய பாடமாக அரசாங்கம் மாணவர்களிடையே திணித்திருக்கின்றது.

ஆனால், நம்நாட்டிலே கூட்டுறவு இயக்கம் முன்பிருந்த நிலையிலும் பார்க்க முன்னேறியிருப்பினும் அதன் பூரணத்துவத்தை அடைவதற்கு அரசாங்கத்தின் போதிய ஒத்துழைப்பின்மையே காரணமாகும். கூட்டுறவுக் கல்வியை மாணவர்களிடையே போதிப்பதிலும், அரசாங்கம் அசிரத்தையாகவேயிருந்து வருகின்றது.

எனவே, இந்நிலை மாற வேண்டுமானல்-மக்கள் சமுதாயம் கூட்டுறவினல், பயனடைந்து முன்னேற வேண்டுமானல்- கூட்டுறவுக் கல்விக்கு விரிவான பாடத்திட்டங்களை உருவாக்க மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் கல்வித் திணைக்களம் முன்வரல் வேண்டும். அத்துடன் நில்லாது, கூட்டுறவுக் கல்வி பற்றிய பாடத்திட்டம் அடங்கிய கூட்டுறவு நூல்களையும் வெளியிடல் வேண்டும். அப்போது தான் மாணவர்கள் இலகுவில் கூட்டுறவுக் கல்வியை கற்றறிய முடியும்.

கூட்டுறவைப் பற்றிய பூரண அறிவை நாட்டு மக்கள் பெறவேண்டுமாயின் நாட்டின் வருங்கால சமுதாயத்தினரிடையே கூட்டுறவுக் கல்வி போதிக்கப்பட வேண்டும். கிராமங்கள் தோறும் உள்ள பாமர மக்களிடையே கூட்டுறவைப் பற்றிய தப்பபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டுள்ளதை நாம் காணலாம். அவர்கள் கூட்டுறவினுல் தாம் மோசடிசெய்யப் படுவதாகவும் தமக்கு எதுவித இலாபமும் இல்லை என்றும் தம்மைச் சுரண்டி வாழும் ஒரு பெருச்சாளியாகவே கூட்டுறவு உருவாயிருக்கிறதென்றும் பலவிதமான தப்பபிப்பிராயங்களை தம்மனதில் பதிய வைத்துள்ளனர். இவர்களது இவ்வவிப்பிராய பேதங்களில் சில உண்மைகள் இருக்கின்றன. ஏனெனில் கூட்டுறவிலும் முதலாளித்துவம் காணப்படுகிறது. ஒருசிலர் பலரைச் சுரண்டி வாழ்கின்றனர். இப்படியான சில விஷமிகளின் செயல்களிலிருந்து மக்களையும், தம் கூட்டுறவு இயக்கத்தையும் காப்பாற்ற இதில் உள்ள அங்கத்தவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பார்களேயானுல் கூட்டுறவைப் பற்றிய தவருன கருத்துக்களை மக்களிடமிருந்து போக்க முடியும். இப்படியான தவருன கருத்துக்களை மக்களிடமிருந்து போக்கத் தகுந்த ஒரேயொரு சாதனம் கூட்டுறவுக் கல்வியேயாகும். மேலும், சில கூட்டுறவு நிலையங்களில் முதிர்ச்சியடைந்த கம்பனிகளில் காணப்படும் சிவப்புநாடா முறை காணப்பட்டு வருகின்றது. இச்சிவப்பு நாடா முறையையும் பொதுமக்கள் விரும்பமாட்டார்கள். இதனுல் மக்கள் கூட்டுறவு இயக்கத்தை தம்மில் இருந்து ஒருபுறமான இயக்கமாகக் கருத நேரிடலாம். இது மாற்றமடைய கூட்டுறவுக் கல்வி அவசியம்.

எனவே, நமது நாட்டின் பொருளாதார நிலையை உணர்ந்து செயலாற்றுவதற்குப் பொருளாதாரக் கல்வி எவ்வாறு உறுதுணை புரிகின்றதோ, அவ்வாறே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற முயற்சிகளை மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுவதற்குக் கூட்டுறவு முறையே ஒரே மார்க்கம் என்பதையும் எல்லோரும் உணரவேண்டும். அதற்கு ஒரே வழி உயர்தரப் பாடசாலைகளில் கூட்டுறவை ஒரு பாடத்திட்டமாக, அவசியமாக மிகவிரைவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கூட்டுறவே நாட்டுயர்வு என்ற நம்பிக்கை நம் நாட்டு மாணவர்களுக்கு எப்போது பிறக்கின்றதோ, அப்போது தான் மறுமலர்ச்சி என்ற சொல்லின் பொருளை நம் நாட்டவர் புரிந்து கொள்ள முடியும்.

9ம் பக்கத்தொடர்ச்சி

என்றும் மாவட்ட அடிப்படையிலும் இதையொத்த சபை இருத்தல் வேண்டும் என்றும் விசாரணைக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

நடைமுறைக்கு இயைந்த வகையிலே இலட்சியங்களை அமைக்க வேண்டியதின் அவசியத்தினையும், எவ்வெவற்றினை சாத்தியமாக்குதல் முடியும் என்ற உணர்வுடன்தான் தமது தகவுரைகளைச் செய்திருப்பதாக விசாரணைக் குழுவினர் குறிப்பிடுகின்றனர். எதிர்காலத் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடிய வகையிலே நடைமுறை சாத்தியமான ஓர் ஆவணத்தினை தயாரிப்பதே தமது நோக்கமாக இருந்ததென்றும் அவர்கள் மேலும் கூறுகின்றனர்.

## காந்திமகான் மணிமொழிகள்.

வேள்விகளைச் செய்வதில் ஆழ்ந்த பொருளுண்மை உண்டு தூய்மைப்படுத்தும் நெருப்பில், நம்முடைய பலவீனங்களையும் வெறிக் குணங்களையும், குறுகிய புத்தியையும் எரித்து நம்மைத்தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மனச் சாட்சியை வாழ்க்கை வழிகாட்டியாக வைத்திருக்க முடியாது. அது எல்லா இடத்திலும் சரியாயிருப்பதில்லை. மனச் சாட்சிக்கு வழி காட்டவல்லது உலகத்துள்ள மகான்களின் அனுபவங்களாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிஷ்ட பிரிவில் இரண்டாவது பரிசு பெற்ற கட்டுரை

# கிராமச் சந்தை

**அருணாவதி ஆறுமுகம்**

**மக்களுக்குத்** தேவையான பொதுத் தாபனங்களில் கிராமச் சந்தையும் ஒன்றாகும். மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தங்கள் தங்கள் கிராமத்திலேயே ஒரு கிராமச்சந்தை இருப்பது முக்கியம் எனக் கருதுகின்றனர். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு கிராமச் சந்தை இல்லாவிட்டால் அவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கு அயற் கிராமத்திற்கும் சில வேளைகளில் மூன்று நாலு மைல் தொலைவிலுள்ள சந்தைகளுக்கும் செல்ல வேண்டி ஏற்படுகிறது. அப்படி அவர்கள் செய்வதால் அவர்களுடைய பணம் தேவையற்ற முறையில் செலவாவதோடு வீண் காலதாமதமும் ஏற்படுகின்றது. ஒவ்வொரு கிராமத்திலும் உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களை அயற்கிராமங்களுக்குக் கொண்டு செல்வதென்றால் வாகனத்திலேயே செல்ல வேண்டி ஏற்படுகிறது. விளைந்த பொருள்களை விற்று அதன் இலாபத்தில் அரைப் பகுதி அப்பொருள்களைக் கொண்டு செல்லும் பிரயாணச் செலவாகச் செலவழிகின்றது. இதனால் விளைபொருள்களை உற்பத்தி செய்வோர் அதிக இலாபமடைய முடியாமலிருக்கின்றனர். ஆகவே ஒவ்வொரு கிராமத்திற்கும், கிராமச் சந்தை முக்கியமாக அமைகின்றது.

கிராமச் சந்தை அக்கிராமத்தின் நடுப்பகுதியில் அமைதல் வேண்டும. ஏனென்றால், அக்கிராம மக்கள் எல்லோருக்கும் வசதியான முறையில் அது அமைந்திருந்தல் வேண்டும். சந்தை அமையும் இடம் மக்கள் சஞ்சாரமற்ற இடத்திலும், நல்ல காற்றோட்ட வசதிகள் உள்ள இடத்திலும், போக்குவரத்து வசதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள இடத்திலும் அமைதல் வேண்டும். மழை வெய்யில் போன்றவற்றிலிருந்து மக்கள் பாதிக்கப்படாமல் அதற்கேற்ற கட்டிட வசதிகள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். அதுவுமின்றி மலசல கூடங்கள், தண்ணீர் வசதிகள், மின்சார விளக்குகள் என்பன அமைந்திருத்தல்வேண்டும்.

மக்கள் கூட்டங் கூட்டமாகச் சந்தைக்கு வருவதைப் பார்க்க அழகாக இருக்கும். அவர்கள் கூட்டம் கூட்டமாக வரும் பொழுது சந்தையில் உள்ள பொருள்களின் பேச்சே அவர்களின் பேச்சில் ஒலித்த வண்ணமிருக்கும். சந்தையின் நாலாபுறங்களிலும் ஒற்றை மாட்டு வண்டிகள், இரட்டை மாட்டு வண்டிகள், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வண்டிகள் முதலியவற்றைக் காணலாம். சுமார் பத்துப் பதினொரு மணியளவில் சனக் கூட்டம் அங்கு அதிகரிக்கும்பொழுது சனங்கள் ஒருவரையொருவர் மோதும் அளவுக்கு நெருக்கம் அதிகரிக்கின்றது.

சந்தையில் வாங்குவோரும் விற்போரும் அதிகரித்துக் கொண்டிருப்பார்கள். அங்கு மரக்கறி விற்கும் பகுதியிலும், மீன் கடைகளிலும், அதிகமான கூட்டம் காணப்படும். அனேகமாக சந்தைகள் வெள்ளிக்கிழமை, புதன் கிழமை, சனிக்கிழமை ஆகிய நாட்களில் ஒரு வாரத்தில் கூடுகின்றது. ஆனல் கிராமச் சந்தை மக்களுடைய அன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு நாளும் கூடுகின்றது. கிராமச் சந்தையில் விற்பனை செய்வோரிடத்தில் பொருளுக்கு ஏற்றவண்ணம் வாடகை வசூலிக்கப்படுகிறது

கிராமச் சந்தையை ஒரு சந்திப்பு நிலையம் என்று கூறலாம். ஏனென்றல், அங்கு பல மக்களும் வருகின்றர்கள். அவர்கள் எல்லோரையும் ஒருவரை யொருவர் ஒரே நேரத்தில் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றது. அவர்களுக்கிடையில் பல பிரச்சினைகள் இருக்கலாம். அப்பிரச்சினைகள் பற்றி அவர்கள் ஆராய்வார்கள். காலை 11 மணியிலிருந்து மாலை 2 மணி வரையும் அதிகமான சனக்கூட்டம் சந்தையிலே காணப்படும். பின்பு படிப்படியாக சனங்கள் கலைந்து கொண்டிருப்பார்கள்.

காலை தொடக்கம் மாலை வரை விற்பனையில் ஆழ்ந்து கொண்டிருந்தவியாபாரிகள் வீடு செல்லும் நோக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு ஆயத்தமாக தங்கள் வண்டிகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு வியாபாரிகளும் அன்று விற்பனை செய்த பொருள்களின் பணத்தை எண்ணிக் கொண்டிருப்பார்கள். சிலர் இன்று அதிகமான பொருள்கள் விற்கவில்லையே, கொண்டு வந்த பொருள்களின் முதல் கூட வரவில்லையே, இன்று யாருடைய கண்ணில் விழித்தேன் என்று கூறிக் கொண்டிருப்பார்கள். சிலர் கொண்டு வந்த பொருள்களை எல்லாம் விற்றுவிட்டேன். இதே போன்று எப்பொழுதும்விற்பனை செய்யவேண்டும்என்று இறைவனைப் பிரார்த்திப்பார்கள். பொழுது மறைந்துவிட்டது வீட்டுக்குச் செல்வதற்கு நேரமாகிறது. என எண்ணிக் கொண்டு எஞ்சிய பொருள்களையும் எடுத்துக் கொண்டு நடந்தும், சிலர் மோட்டார் வாகனங்களிலும் வீடு செல்வார்கள். சுமார் ஏழரை எட்டு, மணியளவில் அங்கிருந்து எல்லோரும் சென்றபின் கிராமச் சந்தைக் கட்டிடங்கள், மின்சார விளக்குகளின் ஒளியுடன் மனித நடமாட்டமேயில்லாது வெறுமையாகக் காட்சியளிக்கும்.

## வ. ஐ. மே. சபையின் 32-வது வருடாந்தக் கூட்டுறவு மகாநாடு

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் முப்பத்திரண்டாவது வருடாந்தக் கூட்டுறவு மகாநாடு 24-10-69, வீரசிங்கம் மண்டபத்தில் நபடைபெறும். கூட்டுறவு மகாநாட்டிற்கு மக்கள் வங்கித்தலைவர் திரு. T. B. பணபொக்கே தலைமை வகிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மைவாய்ந்த கூட்டுறவுப் பணியாளர் கௌரவிக்கப்பட வேண்டும்

நேர்மையோடு நீண்ட காலமாகக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றுபவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். பொதுமக்கள் மத்தியிலே இவர்களுக்குத் தக்கமுறையில் விருதுகளும், பட்டங்களும் அளிப்பதற்கான திட்டங்களை விரைவிலே வகுத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் கூட்டுறவுப் பணியாளருக்கு ஊக்கமளிப்பதுடன் இயக்கத்தினையும் பலப்படுத்தலாம். இதற்கு முதற்படியாக கூட்டுறவுத் திணைக்களம் பணியாளர்கள் பற்றிய விபரத்தினைச் சேகரித்தல் வேண்டும்.

மேற்கண்டவாறு சுன்னாகம் ஐக்கிய பண்டசாலைச் சங்கத்தின் வெள்ளி விழாவிலே அச்சங்க முகாமையாளராக 20 ஆண்டுகாலமாக கடமையாற்றி வரும் திரு. மு. கேசவனுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வ. ஐ. மே. சபை உபதலைவர் திரு. R. C S. முக் உரையாற்றுகையில் கூறினர். அவர் மேலும் பேசுகையில் நல்ல முகாமையாளர் நல்லசங்கம். நல்ல சங்கம் நல்ல முகாமையாளர் என வற்புறுத்தினர்.

இவ்விழாவிற்கு தலைமை வகித்த திரு. கு. அம்பலவாணர் நேர்மையும், தன்னலமற்ற சேவையின் மூலமும் தான் சங்கம் முன்னேற முடியும் என அழுத்தினர்.

திரு. இ. கனகரத்தினம் உரையாற்றுகையில் இச்சங்கம் பண்டசாலைச் சங்கமாய் இருந்தும் ப நோ, கூ. சங்கங்களையும் தோற்கடிக்கும் முறையிலே இயங்கி வருகின்றன என்றும். இவ்வெற்றிக்கு நிருவாகச் சபையினரதும பணியாளரினதும் தன்னலமற்ற சேவையே காரணம் என சுட்டிக்காட்டினர்.

இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. N. சின்னத்தம்பி பேசுகையில் இப்பகுதியிலே நீண்டகாலமாகக் கூட்டுறவு இயக்கம் செழித்தோங்கி வருவதாகவும், சங்கங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி உறுப்பினர்களிலும் பார்க்க பணியாளர்களிலே தான் தங்கியிருக்கின்றதென்றும் கூறினர்.

வலி வடக்கு காரியாதிகாரி திரு. P. பற்றிக் உரையாற்றுகையில் ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்குமிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளை ஒழித்து ஒரு பொதுவுடமைச் சமுதாயத்தினை உருவாக்குவதென்றால் அதனைக் கூட்டுறவு இயகக் மூலமே செய்யமுடியும் என வற்புறுத்தினர். சங்கங்கள் மக்களின் தேவைகள் யாவற்றையும் பூர்த்தி செய்ய விழைய வேண்டும் என்றும் சங்கங்களின் வெற்றிக்கு பணியாளர் பெரிதும் உதவுகின் என்றும் கூறினர்.

மருத்துவ கலாநிதி A. நடராஜா உரையாற்றுகையில் இச்சங்கம் மிகத் திறமையாக இயங்கி ஒரு முன்மாதிரியாக திகழ்கின்றது என்று பாராட்டினர். கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. பூ. குமாரசாமி உரையாற்றுகையில் சங்கத்தின் அன்ருட அலுவல்களை நிருவகிக்கும் பொறுப்பும், கடமையும் முகாமையாளருக்கே உரியது என வலியுறுத்தினர். ஆனால், சில சங்கங்களிலே நிருவாகக் குழுவினர் தேவையற்ற முறையிலே பணியாளரின் கடமைகளிலே தலையிடுகின்றனர் என்றும், இதனால் முன்னேற்றம் பாதிக்கப்படுவதோடு பணியாளர் தமது கடமைகளைச் செவ்வனே செய்ய முடியாது திணறுகின்றனர். ஆனல் இச்சங்கத்திலே அத்தகைய பிணக்கு இல்லாததாற்ருன் திறம்பட இயங்குகின்றது என்றும் இதன் முன்மாதிரியை ஏனைய சங்கங்களும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் மேலும்கூறினர்.

வட்டாரப் பரிசோதகர் திரு. இராசையா கூறியதாவது: பணியாளரும் நிருவாகக்குழுவினரும் சங்கங்களை தமது சொந்த தாபனங்களைப்போல்கருதவேண்டும். சங்கங்கள் மக்களின் தேவைகள் யாவற்றையும் நிறைவேற்ற வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் தனிப்பட்ட வியாபாரிகளை நாடமாட்டார்கள். சங்கங்கள் சேமிப்பை வளர்க்க முயலவேண்டும்:

திரு. மு. கேசவன் தனக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி கூறினர். பிரம்ஸ்ரீ சி. கார்த்திகேசு ஐயரின் நன்றியுடன் கூட்டம் நிறைவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் கூட்டுறவுப் பணியாளர் பரீட்சையில் (சாதாரண பிரிவு) சித்தியடைந்தவர்கள் விபரம்

**முதலாவது பிரிவு**

S. சந்திரகோபாலு

**இரண்டாவது பிரிவு**

C. காசிப்பிள்ளை
V. சிவமணி
S. கணபதிப்பிள்ளை
T. கணபதிப்பிள்ளை
S. செல்வரத்தினம்
S. விநாயகமூர்த்தி

**சாதாரண சித்தி**

S. ஸ்ரீகாந்தன்
S. இரத்தினம்
P. பூபதி
A. சந்திரபோஸ்
A. தியாகலிங்கம்
K. ஜெயராஜசிங்கம்
N. கனகரத்தினம்
P. தயாளமலர்
K. நவரத்தினம்
P. தங்கராஜா
M. ஜெகநாதன்
P. தேவராஜா
P. திருநாவுக்கரசு
A. சிங்கராஜா
A. வள்ளியம்மை
K. பத்மாசனி
N. கோபாலகிருஷ்ணன்
N. ஈஸ்வரி
Y. இராமநாதன்
S. முத்துக்கருஷ்ணன்

**நூனசித்தி**

S. வசந்தமலர் (காரியதரிசி செயலாற்றும் முறை)
V. திருஞானம் (கூட்டுறவு)
M. புஷ்பவதி(நிருவாகம்,காரியதரிசிசெயலாற்றும் முறை)
C. சிவலிங்கம் (கூட்டுறவு, நிருவாகம்)
V. கனகம்மா (நிருவாகம்)
V. சடாட்சரம் (கூட்டுறவு, நிருவாகம்)
P. வடிவேலு (கூட்டுறவு)
N. முத்துக்கிருஷ்ணன் (கூட்டுறவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E. M. நல்லையா (காரியதரிசி செயலாற்றும் முறை)
S. மார்க்கண்டேயர் (நிருவாகம்)
T. பத்மநாதன் (நிருவாகம்)
M. யோகராஜா (நிருவாகம்)
R. மகேஸ்வரி (கூட்டுறவு)
S. குமாரசாமி (கூட்டுறவு)
V. சிவஞானசுந்தரம் (கூட்டுறவு)
S. யோகேஸ்வரன் (கூட்டுறவு)
V. இளங்கோ (கூட்டுறவு)
S. சிவசுப்பிரமணியம்
(கூட்டுறவு, காரியதரிசி செயலாற்றும் முறை)
V. இரத்தினம் (கூட்டுறவு, நிருவாகம்)
S. விஸ்வலிங்கம் (நிருவாகம்)

Appropriate Technology Service
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

**இவ்வருடம் பூர்த்தி செய்தோர்**

பி. தெய்வநாயகி
S. செய்மானந்தன்

## யாழ் கூட்டுறவுப் பயிற்சிக்கலாசாலை கனிஷ்ட பிரிவுக் கூட்டுறவுப்பணியாளர் பரீட்சை முடிவு

**சித்தியடைந்தவர்கள்.**

V. நவரத்தினம், V. நடராசா, K. நிற்சிங்கம், S. நடராசா, A. அமிர்தநாதன், A. சகாதேவன், T. சிவப்பிரகாசம், M. சத்தியசீலன்.

**நூதனசித்தி.**

S. கனகசபை (கூட்டுறவு விற்பனையியல்) P. நடராசா (நிருவாகம்) K. பாலசுந்தரம் (கூட்டுறவு, கணக்கு வைக்கு முறை) A. ஜேசுதாசன் (கணக்கு வைக்கும் முறை, விற்பனையியல்) S. பொன்சியனஸ் (நிருவாகம்) S. ஸ்ரீதரன் (விற்பனையில், நிருவாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிஷ்ட பிரிவில் மூன்றாவது பரிசுபெற்ற கட்டுரை

# கிராமச் சந்தை

**ஆ. யசோதரா**

உலகப் பொது நன்மைக்காகப் பொதுநல மனப்பான்மை கொண்டு தன் வயிற்றை மட்டுமல்ல, இந்த உலகத்தின் வயிற்றையே நிரப்பிவிடும் ஒரு அற்புதமான ஆத்மாதான் விவசாயி. அவர்களின் முயற்சியால் விளையும் காய் கறி வகைகளை விற்பதற்காக அவர்கள் கூடும் இடமே சந்தையாகிறது.

சனக்கூட்டத்தின் இரைச்சல், காய்கறிகளின் கும்பல், அவற்றை விற்பதற்காகக் கூடியிருக்கும் வியாபாரிகள், காய்கறிகளின் பெயர்களையும், விலைகளையும் சொல்லி மக்களை அழைக்கும் வியாபாரிகளின் குரல் ஒலி இத்தனையும் நாம் ஒரு சந்தையை அணுகியுள்ளோம் என்பதற்கு அறிகுறிகள். அது வேறு எந்தச் சந்தையுமல்ல, எனது கிராமத்திலுள்ள காய்கறிகள் விற்பதற்காக அமைந்திருக்கும் சந்தையேதான் என்பது புலனாகிறது.

காலை, மாலை இரு நேரங்களிலும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தோட்டக்காரர்கள் தத்தம் காய்கறிகளை விற்பதற்காகக் கூடும் சந்தை எனது கிராமச்சந்தை. அவர்கள் காய்கறிகளை விற்பதற்காகக் கொண்டு வந்த நேரந்தொடக்கம் அக்காய்கறிகளை விற்று முடியும் வரைக்கும் செய்யும் பிரயத்தனங்கள் பல. காய்கறிகளுக்குள்ள இயற்கையான குணங்களைப் பற்றித் தங்கள் கற்பனை கலந்த பேச்சுடன் அவர்கள் விபரித்து விற்பனை செய்யும் விதமே ஒரே தனி அலாதி. அவற்றை விற்பதற்காக எடுக்கும் முயற்சிகள் பயனற்றுப் போய் விட்டால் ஏமாற்றத்துடன் சந்தைக்

சந்தைக்குரிய குத்தகைப் பணத்தைக் கொடுத்து விட்டுச் செல்லும் நிலை பரிதாபத்துக் குரியதுதான்! இவ் விற்பனை மூலமே வாழ்க்கையை நடாத்தும் எத்தனையோ வியாபாரிகள் வாங்க வருபவர்களை எவ் விதத்திலோ சம் வசப்படுத்தி, தம்மிடமே தினமும் வாங்க வைத்து விடுகிறார்கள். வாடிக்கையாக ஒருவரிடம் காய்கறிகளை வாங்குபவர் அவரை விட்டு மற்றொருவரிடம் காய்கறி வாங்கச் செல்வதில்லை. இவ்வாறு வாடிக்கையாகப் பலர் தம்மிடம் வாங்க வருவதால் தமது காய்கறிகளை விட வேறு காய்கறிகளை அதிக விலை கொடுத்து வாங்கியும் விற்கத் தயாராகி விடுகிறார்கள். தங்கள் வருமானத்தை எதிர்பாராது வாங்குபவர்களாகவே தரம் மிகுந்த காய்கறிகளை விற்கின்றனர் என்பது போன்ற பேச்சு வாங்க வருபவர்களையும் கவர்ந்து விடுவதால் அவர்கள் எந்த விலை கொடுத்தும் வாங்கிக் கொள்ளத் தயாராகி விடுகின்றனர். இது சில வியாபாரிகளின் தந்திரம் என்று தான் கூறவேண்டும். சிலர் பொருளை விற்கும் போது ஒரே விலையுடன் தமது வியாபாரத்தை முடித்துக் கொள்கின்றனர். சிலர் கூடிய விலையைச் சொல்லிப் படிப்படியாக விலையைக் குறைத்து எப்படியோ தமது பொருள்களை விற்றுவிட முயற்சி செய்கின்றனர். இப்படிப் பல ரகம் வாய்ந்த வியாபார தந்திரங்களைத் தெரிந்த வியாபாரிகள் எனது கிராமச் சந்தைக்கு வந்து பொருள்களை விற்று ஏராளமாகப் பணம் சம்பாதிக்கின்றார்கள்.

விற்பனைக்கொரு இடமாக, பல ஏழைகளின் எதிர்கால நிலையாக, நமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும வசதி வாய்ந்ததாக எனது கிராமச் சந்தை விளங்குகிறது. அங்கு தினமும் வியாபாரிகளைச் சந்திக்கின்றோம். வாழ்க்கை என்னும் நடைபாதையிலே நாம் சந்திக்கும் விதம் விதமான மனிதர்களில் எனது கிராமச் சந்தைக்கு வரும் வியாபாரிகள் யாவரும் ஒரே விதமானவர்கள் போலவே எனக்குத் தோன்றுகின்றனர்.

மூன்றாவது பரிசு பெற்ற கவிதை

# நாம் நயம் பெறுவோம்

**வே. ஐயாத்துரை**

கும்மி அடியுங்கள் கும்மி அடியுங்கள்
கூட்டுற வைத்தினம் நாட்டிடவே!
செம்மை யுடனெங்கள் தேசம் திகழ்ந்திடச்
சீரோடு பாடி அடியுங்கடி

பாட்டுக்குச் சொற்களே கூட்டுற வாகிடும்
பாடிடப் பண்ணுமோர் கூட்டுறவே!
கேட்டுக கிடைத்திடும நற்கருத் தின்படி
நாட்டில் நடப்பது நற்பயனே!

நானுண்டு வாழுவ னென்று நினைவுற்று
நாளும் தனித்திடில் தாழ்வாமே!
தேனுண்டு பண்ணிடும் ஈக்களை நோக்கியே
சேர்ந்து செயல்புரிந் தோங்கிடுவோம்

நல்லன நல்கிடும் கூட்டுற வைநாடி
நாட்டினில் நாமும் நயம்பெறுவோம்
பல்வகை நற்பணிக் கெங்களின் பங்கையும்
பற்றுடன் ஈய்ந்தே பயன் பெறுவோம்

உற்பத்தி தன்னைப் பெருக்கிட லாந்தொழில்
ஓங்கிட ஊக்கத்தை ஊட்டிடலாம்
நற்புத்தி யாளராய் வாழ்ந்திட லாமென்றும்
நாணய முற்றே நடந்திடலாம்

சங்கப் பொறுப்பினைக் காத்திடு வோமதன்
சட்டதிட் டங்களைச் சார்ந்திடுவோம்
அங்கத்த வர்களை ஊக்கிடு வோம் தினம்
ஆக்கத்தை நோக்கிப் பணிபுரிவோம்

தேனீக்கள் கட்டிய கூட்டைச் சிதைத்திடும்
சித்தமி லாதவர் செய்கையைப் போல்
மாநோக்க முற்றிடு கூட்டுறவை நாமும்
மாசு படுந்தாது காத்திடுவோம்.

வானத்தை முட்டிடு மாடிக ளும்வளம்
வற்றுத தானியச் சாலைகளும்
கானந் தருங்கலை மன்றங்க ளோடுநற்
கல்வியுந் தந்திடும் கூட்டுறவே!

நாட்டை உயர்த்திடக் கூட்டுற வாய்மக்கள்
நாளும் உழைத்திட வேண்டுமென்றே
கூட்டமாய்க் கூடியே கும்மி அடியுங்கள்
கோலக் கருவிழி மங்கையரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியம்: முற்றெடர்

# தவம்

—காரை செ. சுந்தரம்பிள்ளை

தவமும்தான் தவமுடையார்க் காகு மென்று
சாற்றுமொழி சாரமற்ற வார்த்தை யன்று
பவமதனை அறுப்பதற்குன் உள்ளம் மிக்க
பக்குவத்தை யடைந்திடுதல் வேண்டும் வீணாய்
அவமதனில் ஈடுபட வேண்டாம் உன்தன்
அன்னையவள் ஆசையதைத் தீர்த்து வைப்பாய்
சவமதனை நீராட்டித் தாமம் சூட்டித்
தருகல்வி யூட்டவது கற்ற லுண்டோ ?

ஒப்பில்லா முனிவரரே உலக வாழ்வை
உதறியவென் உள்ளத்தில் உறுதி கொண்டேன்
உப்பில்லா வாழ்க்கையிதை நிலையென் றெண்ணி
ஒழுகுவதில் லாபமில்லை உணர்ந்து கொண்டேன்
தப்பில்லா வாழ்க்கைதவ வாழ்க்கை யென்று
தங்களடி சரணடைந்தேன் தள்ளி விட்டால்
இப்போதே இவ்விடத்தே எரியை மூட்டி
என்தனுயிர் போக்கிடுவேன் உறுதி யென்றாள்

## தவமும் தையலும்

மங்கையின் மாற்றம் கேட்டு
மறுவறு முனிவர் பெண்ணே
பொங்கிடும் துயரத் தாலே
பேதலிக் காதே இங்கே
தங்கிட வசதி செய்து
தருகிறேன் தரணி போற்றும்
திங்களை யணிவான் பாதம்
தினந்தொழு திருப்பா யென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவள் அன்னை கேட்டு
மருச்சிமா முனியை நோக்கி
பெற்றவள் உள்ளம் வேகும்
பெற்றியை யறியா இந்தக்
கற்பக வல்லி யாளைக்
கானகந் தன்னி லையா
நற்றவம் புரியு மாறு
நவிலுதல் முறையோ என்றாள்

கூவிடும் குயில்கள் கொஞ்சிக்
குலவிடும் கிளிகள் குன்றின்
தாவிடும் அருவி யோரம்
தமிழ்கலந் தினிமை யாகப்
பாவிடும் பூவை நர்த்தம்
பயின்றிடும் மஞ்ஞை தென்றல்
மேவிடும் பொழில்கள் உள்ளம்
மேய்ந்திடும் இனிய காட்சி;

மங்கையர் சூழ நல்ல
மலையினில் ஆடிப் பாடிப்
பொங்கெழில் கமல வாவி
போய்ப்புகுந் தினிமை யாக
தங்களை மறந்த வண்ணம்
தண்புனல் ஆடு வாரோ(டு)
எங்களின் இதய மன்னன்
இருத்தலும் மறப்ப ளோதான்

பாலொடு பழமும் பாகும்
பல்சுவை அமுது முண்டு
நாளொடு பொழுதை நல்ல
நகரினில் நடன மாடி
யாழொடு இனிமை யாக
யாவரும் உவக்கப் பாடி
ஆளொரு பரிசில் ஈய
அழகுடன் இருந்தா ளன்றோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்மலர் அணையின் மீது
மெல்லியர் கீதம் பாட
இன்துயில் கொண்ட என்தன்
இனியவள் இங்கே உள்ள
வன்னில மீது மேனி
வடுக்கொள உறங்கு வாளோ?
என்னுளம் வேகு தையா
என்செய்வேன் ஏழை யானே

கஞ்சமென் பாதம் நோகக்
கல்லினில் நடந்து செல்ல
வஞ்சியும் உள்ளம் கொண்டாள்
வருவன அறியாப் பேதை
நெஞ்சினில் இருத்தி வைத்து
நித்தமும் காத்த என்னைக்
கொஞ்சமும் எண்ணு ளாகக்
கொண்டதே சரியென் கின்றுள்

தாயவள் வார்த்தை கேட்டு
தவத்தினில் மிக்கோன் உன்றன்
சேயினை யெண்ணி வீணுய்ச்
சித்தமே கலங்க வேண்டாம்
போயிரு இல்லந் தன்னில்
பொற்கொடி யுளந்தி ரும்பி
ஓரிரு நாட்க ளாலே
உன்றனை யடைவாள் என்றுர்

இன்பமே யன்றி யேதும்
இதுவரை யறியா விந்த
மென்மலர் மங்கை கானில்
மெலிவதை விரும்ப மாட்டாள்
நண்பகற் போதில் வெய்யில்
நலிவுறச் செய்யும் போது
துன்பமே யடைவாள் பின்னர்
துறவறம் கசந்து போகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையின் உள்ளம் தன்னை
மாற்றிட ஏற்ற புத்தி
இங்கித மாகச் சொல்லி
இங்கிருந் தனுப்பி வைப்பேன்
நங்கையை நினைத்து நீவிர்
நலிவினை யடைய வேண்டாம்
உங்கள தில்லம் செல்வீர்
உவந்தெனத் தாயும் சென்றாள்

## பணி செய்யும் பாவை

கற்று ணர்ந்த முனிவர் உரைத்திடக்
காம மஞ்சரி யாளை விடுத்துமே
பெற்ற தாயவள் வீட்டை யடைந்தனள்
பெண்ணும் ஆச்சிர மத்தில் வதிந்தனள்
பற்றி லாதவர் வாழு மிடத்திலோர்
பற்று மிக்கவ ளாகவிம் மங்கையும்
நற்றவம் செய்ய உள்ளம் துணிந்தமை
நங்கை மார்க்குளோர் விந்தைய தாகுமே

கோழி கூவிட நித்தம் எழுவதும்
குப்பை கூளங்கள் கூட்டிப் பெருக்கலும்
வாழு கின்ற குடிசை யுடன்முனி
வணங்கும் ஆச்சிர மத்தை மெழுகலும்
ஆழ மானகங் காநதி செல்வதும்
ஆங்கு நீராடித் தண்ணீர் கொணர்வதும்
சூழி ருள்கலைந் தேகிடு முன்பதாய்த்
தூய நன்மலர் தேடிப் பறிப்பதும்;

சோலை யில்வளர் கின்ற செடிகொடி
சோர்வி லாது செழிப்பதற் கெண்ணியே
காலை தோறும்தண் ணீரை இறைப்பதும்
காத லோடங்கு வாழும் பசுக்களில்
பாலை நித்தம் கறந்து முனிவரின்
பாதம் வைத்ததைப் பூசைக் களிப்பதும்
கோல மாமயில் கொண்ட துறவறம்
குற்ற மற்றதென் றெண்ணிட வைத்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் பாதம் பணியும் முனிவரின்
 எண்ணம் யாவு மறிந்தவர் கேட்குமுன்
பூசை வேளையில் வேண்டும் பொருட்களைப்
 புனித ஞரிடம் அன்போ டளிப்பதும்
வாச மென்மலர் மாலை தொடுப்பதும்
 வையம் காக்கும் ஒருவன் புகழினைப்
பூசித் தேபல கீத மிசைப்பதும்
 பூவையாள் செய்யும் தொண்டுகள் ஆனவே

தில்லை யில்நட மாடும் இறைவஞர்
 செய்யுந் தாண்டவம் கற்றவ ளாகையால்
கொல்லும் வேல்விழி யாள்சில வேளையில்
 கொஞ்சு கின்ற சதங்கை ஒலித்திட
நல்ல வாறு பதம்பிடித் தாடலும்
 நாலு திக்கு மிறைவன தாட்சியில்
உள்ள தென்பதைக் கூறும் அபிநயம்
 ஒவ்வொன் ருக விளக்கி வருவதும்;

காம மஞ்சரி நாளும் புரிந்திடும்
 காரி யங்களாய்க் காட்சி யளித்தன
தீமை யற்றவ ரான முனிவரும்
 சேயிழை செய்யுந் தொண்டுகள் கண்டுமே
பூமி மீதிவள் போலவோர் நல்லவள்
 புண்ணி யத்திஞல் வாய்த்தனள் என்றுமே
சாமி மார்க்கெலாம் சொல்லத் தொடங்கிஞர்
 தைய லின்பணி நன்கு தொடர்ந்ததே

## அறம் அழியுமா?

இப்படி யாக நாட்கள்
 ஏகிடு காலை யோர்நாள்
ஒப்புடன் முனிவர் தம்மை
 ஒண்டொடி அடைந்து ஐய;
செப்பிடும் உலக வாழ்வில்
 சிரஞ்சீவி யாக நிற்கும்
தப்பிலாப் பொருளெ தென்ருள்
 சார்ந்துள்ள 'அறம்'அ தென்ருர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்பொருள் இன்ப மென்று
அகிலமே புகழும் மூன்று
திறமைசேர் பொருட்க ளுள்ளே
சிறந்தது அறமே யாகும்
மறுமையும் பயக்கும்; மற்றும்
மாண்பையும் அளிக்கும்; தூய
துறவறம் தன்னைத் தாங்கும்
தூண்அற மாகு மென்றார்

முனிவரின் வார்த்தை கேட்டு
முறுவலோ டவரைப் பார்த்து
அனைவரும் போற்று மிந்த
அறத்துடன் ஏனை மக்கள்
இணையென இன்பம் மற்றும்
இடர்தரு பொருளைச் சொல்வர்
அணைந்திடும் இவைகள் தூய
அறத்தினுக் கீடோ வென்றாள்.

பார்புகழ் அறத்தி னோடு
பனித்துளி போன்ற மற்றச்
சேர்பொருள் இன்பம் தம்மைச்
செப்புதல் சிரிப்பே யாகும்
கார்முகி லோடு தீயின்
கரும்புகை தன்னை யொப்பில்
யார்நகை கொள்ள மாட்டார்
என்றனர் முனிவ ருந்தான்

அறம்புரி கின்ற தூயர்
அரிவையர் ஆசை யாலே
திறம்பினும் சிறிது கூடச்
செய்யற மழிவ தில்லை
மறந்துமே தீங்கு செய்யா
மாமுனி வரரே! யென்தன்
கருத்திது சரியோ என்றாள்
கணிகையர் திலக மன்னாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர் தூற்றும் காமம்
கடுகள வறத்தை யேனும்
அற்றிடச் செய்யா தென்றல்
அறிந்திடா எனக்கு நீயும்
முற்றிலும் விளக்க மாக
மொழியென முனிவர் கேட்க
விற்பனைக் குரியாள் சற்று
விபரமாய்க் கூற லானள்

## வேறு

நானி லத்துயிர் யாவும் படைத்திடும்
நான்மு கன்புவி போற்று மெழிலுடை
வான மங்கை திலோத்தமை மீதிலே
வைத்த காதல் உலகம் அறிந்ததே
கான கத்தில் அகலிகை யாளது
கற்பைக் கொன்றஅவ் விந்திர னனவன்
பூனை யாகியோர் ஆயிரம் கண்கள்
பொறிக்கப் பெற்றதும் பூதலம் கண்டதே

எண்ணி லாத கலைகள் பயிற்றிடும்
ஈடி லாத வியாழ பகவ(ா)னின்
கண்ணை யொத்த மனைவியின் மீதிலே
காம முற்றஅச் சந்திர னனவன்
புண்ணி யத்தை யிழந்திட வில்லையே
புகலு கின்ற பெருமை உடைமையால்
தண்ண ருங்கதிர் வீசி ஒளியினைத்
தார ணிக்களிக் கின்றனன் அல்லவோ

மாப லிப்பெரு மன்ன னிடம்சிறு
மண்ணைக் கேட்டுல கத்தை அளந்தவன்
கோபி யர்பல ஆயிரம் பேர்களைக்
கூடி யின்பம் சுகித்திட வில்லையா
ஆப்பி ழுத்த குரங்குகள் போலவே
ஆத வன்வியா சர்பெருங் காமத்தால்
தீப்பி டித்துளம் வெந்த பொழுதினும்
செய்ய றம்பிழைத் தாரெனில் இல்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணும் கற்புடை யாளை மணந்தறம்
　　பேணு கின்றவன் காணுமோர் இன்பமே
வான கத்திலும் நன்கு சிறந்ததாய்
　　வள்ளு வத்தைப் படித்தவர் சொல்கிறார்
ஏனி தைப்புகல் கின்றனன் என்றிடில்
　　இளமை போய்விடில் மீள்வதே யில்லையே
காணு கின்ற சுகத்தை அடைந்தபின்
　　கான கம்தவத் திற்குச் சிறந்ததே

போற்று கின்ற தவம்புரி கின்றவர்
　　பூவை மாரிடம் உள்ளம் கொடுப்பினும்
சாற்று கின்ற அறத்தை இழந்திடார்
　　தரணி கண்டபே ருண்மையீ தென்றனள்
ஆற்று கின்ற கடமையை நீத்துமே
　　ஆவ லோடு முனிவர் இவளுரை
ஏற்ற தால்மனம் மாறிட லாயினர்
　　என்ன செய்வம் ஊழ் யாவையும் வெல்லுமே

## வேறு

கற்றிடச் சென்றவோர் மாணவன்—தீய
　　கள்ளுக் கடையில் புகுதல்போல்—பொருள்
விற்றிடச் சென்றவோர் வாணிகன்—தொழில்
　　விட்டுத் தெருவில் கிடத்தல்போல்—பகை
அற்றிடச் செய்திடும் மன்னவன்—பிறர்
　　ஆட்சி வரவழி செய்தல்போல்—வீடு
பெற்றிடச் சென்ற முனிவனே—காமப்
　　பேயிடம் சிக்கித் தவித்தனன்

அன்றைய காலத் தறிஞர்கள்—பல
　　ஆழ்ந்த கருத்தை விளக்கிடத்—தினம்
சொன்ன புராணக் கதைகளில் மறைந்
　　துள்ள பொருளை மறைத்துமே—இவள்
என்னவோ என்னவோ சொல்லிட—இவர்
　　எல்லாம் அறிந்தவ ராயினும்—அவள்
சின்ன இடையில் மயங்கியே—காமத்
　　தீயில் விழுந்து மயங்கினர்

(வளரும்)

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Registered as a Newspaper in Ceylon, Regd. No. A 13)


# உங்கள் பணத்தை

## யாழ்ப்பாண கூட்டுறவு மாகாண வங்கியில்

## சேமியுங்கள்

**நிலையானவைப்பு:** 3, 6, 12 மாதங்களுக்கு நிலையாக வைக்கும் வைப்புக்களுக்கு வட்டி முறையே $1\frac{1}{2}\%$, $2\frac{1}{2}\%$, $3\frac{1}{2}\%$ ஆகும். 5 வருடங்களுக்கும், அதற்கு மேலும் நிலையாக வைக்கும் பணத்திற்கு 4 வீதமும், 10 வருடங்களுக்கும், அதற்குமேலான கால வைப்புக்கும் வட்டி $4\frac{1}{2}\%$ வீதமும் கொடுக்கப்படும்.

**சேமவைப்பு:** சேமவைப்பிற்கு $3\frac{1}{4}\%$ வட்டி 1-7-69இல் இருந்து வழங்கப்படுகிறது. இவ்வைப்பிலிருந்து நாளாந்தம் பணத்தை எடுப்பதற்கு வசதி உண்டு.

தாபனங்களுக்கு மிகக் குறைந்த மிச்ச இருப்பு ரூபா 5000/- ஆக இருக்கும் மாதங்களுக்கு 4% வட்டி வழங்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு $4\frac{1}{2}\%$ வட்டி வழங்கப்படும்.

**பிணைவைப்பு:** சங்கங்களின் பிணைவைப்பிற்கு $3\frac{1}{2}\%$ வட்டி வழங்கப்படும்.

**நகை அடைவு பிடித்தல்:** வங்கியின் எல்லாக் கிளைகளிலும் நகை அடைவு பிடிக்கப்படுகின்றது. வட்டி 11 வீதம். எடுத்த பணத்தைப் பகுதி பகுதியாகவும் திருப்பிச் செலுத்தலாம்.

**கிளைகள்**

யாழ்ப்பாணம், பரந்தன், சுன்னுகம், பருத்தித்துறை (நெல்லியடி), சாவகச்சேரி, சங்கானை, ஊர்காவற்றுறை, வலி-கிழக்கு (ஆவரங்கால்) முதலிய இடங்களில் உண்டு.

தலைமைக் காரியாலயம்:

**59, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


**Edited & published by** T. SEENIVASAGAM, B.A., J.P. **residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Northern Division Co-operative Federation, Ltd.** K. K. S. Road, **Jaffna** and **printed at the N. P. Co-op. Ptg. & Pub.** Socy., **Ltd., Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் "பென்சன்"!

'வசதிக்கேற்ப பணம் கட்டும்'
தேசிய உபகாரச் சம்பளக் காப்புறுதிப் பத்திரம்
ஒன்று வாங்குங்கள்.

நீங்கள் என்ன ஊழியம் செய்பவராக இருப்பினும் எவ்வளவு ஊதியம் பெறுபவராக இருப்பினும் உங்கள் ஒவ்வொருவருக்கும் உதவிபுரியும் திட்டமிது. காப்புறுதித் தவணைக் கட்டணத்தை ஒழுங்காகக் கட்ட வேண்டுமென்ற கட்டாயமில்லை; வசதிப்படி, வசதியான நேரத்தில் கட்டலாம். இவ்வாறு சிறு சிறு தொகைகளைக் கட்டி வயோதிபக்காலத்தில் கவலையின்றி வாழ்வதற்கு வழி செய்து கொள்ளுங்கள். வேண்டுவதெல்லாம், ஒரு பிரேரணைப் பத்திரம், பிறப்புச் சான்றுப்பத்திரம் என்பன மட்டுமே. வைத்தியப் பரிசோதனை கூடத் தேவையில்லை.

விவரங்களுக்கு :

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**
**288, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு 2**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org